தி/மூ/இலங்கைத்துறைமுகத்துவாரம் இந்துக் கல்லூரி

க.பொ.த.உயர்தர பரீட்சை மாதிரி வினாத்தாள் – 06

தமிழ் - I

புள்ளி

மாணவர் பெயர் ..... நேரம்- 3.00 மணி

அறிவுறுத்தல்கள் :

பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக எல்லாம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

01. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) "ஒருநாட் செல்லல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ
அணிபூ ணணிந்த யானை யியறேர்
அதியமான் பரிசில் பெறூஉங் காலம்
நீட்டினு நீட்டா தாயினும் யானைதன்
கோட்டிடை வைத்த கவளம் போலக்
கையகத் ததுவது பொய் யாகாதே
அருந்தே மாந்த நெஞ்சம்
வருந்த வேண்டா வாழ்கவன் றாளே."

1. இப்பாடல் இடம்பெற்ற துறை பற்றி விளக்குக.
2. இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
3. இச்செய்யுள் மூலம் வெளிப்படுத்தப்படும் அணிகளை விளக்குக.

(ஆ) "அப்படை கங்கையை அடைந்த ஆயிடைத்
துப்பு உடை கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்பு உடை அண்ணலோடு உடற்றவே கொலாம்
இப்படை எடுத்தது என்று எடுத்த சீற்றத்தான்

1. இச்செய்யுள் இடம்பெறும் சந்தர்ப்பத்தை விளக்குக.
2. இச்செய்யுளில் இடம்பெறும் உவமை அணியினை எடுத்துக் காட்டி விளக்குக.
3. இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.

(12 +12 = 24 புள்ளிகள்)

www.lkedu.lk

02. 'அ' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

'ஆ' பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

பாரதி யென்றொரு தாமரை பூத்தது
பாரத நாடெனும் வாவியிலே - அதன்
சீரித ழாயிரஞ் செங்கதிர் போலொளி
செய்து விளங்குது பூமியிலே.

இந்த நறுமலர் கூம்பிடுமோ இதன்
இன்பம் என்றாயினும் குன்றிடுமோ - உயர்
சிந்தனை யாமெனும் வானுலகேறித்
திளைத்திடலாமது சாம்பிடுமோ. (பாரதி)

சந்தமிகுந்திடு சிந்தென வந்தது
சாரலருவிகள் போல் விழுந்தே - தமிழ்ச்
சிந்தையுருக்குது செம்மை பெருக்குது
சித்திரங் காட்டுது புத்துயிர் போல். (பாரதி)

தாமரைக் காடிது நித்தலுஞ் செந்தமிழ்த்
தண்ணற வெங்குஞ் சொரிவது பார் - பல
காமரு பாவலராகிய வண்டினங்
கண்டன மண்டிக் களித்திடல் பார். (பாரதி)

புத்தப் புதிய சுவையிது முன்னொரு
பூக்களு மிச்சுவை தந்ததில்லை - மெத்த
மெத்த வெறிக்குது காதல் சிறக்குது
வீரம்பிறக்குது நேரினிலே. (பாரதி)

முல்லை குறுஞ்சி யிளமருதம் நல்ல
மோகனப்பாலை முதிர்ந்த நெய்தல் - பண்கள்
கல்லையுருக்க முரன்று முரன்று
கவிக்கணி கூட்டிடல் கண்டிடுவாய். (பாரதி)

மாடு மரங்களு மிச்சுவை கேட்டிங்கு
வண்டு களாகி மயங்குதல் பார் - அது
காடு துறக்குது கோடை தணிக்குது
கானல் பறிக்குது கண்ணனென்றே. (பாரதி)

1. இக்கவிதை கூற விளையும் முக்கிய விடயப் பொருள் யது?
2. பரதியாரின் கவிதைகள் பற்றி ஆசிரியர் குறிப்பிடுவன யாவை?
3. இக்கவிதையில் இடம்பெறும் அணிகளை குறிப்பிட்டு விளக்குக
4. ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பம்சம் பற்றிக் குறிப்பிடுக.

(4 x 4 = 16 புள்ளிகள்)

www.ikedu.lk

அல்லது

ஆற்றல் வாய்ந்த கவிஞராக விளங்கிய பாரதியாரே தனக்கு முன் சென்ற கவிகுல திலகங்களை தமிழ்ப் பெருங் கவிஞரை நினைவு கூர்ந்த வேளைகளில் வள்ளுவர், இளங்கோ, கம்பர் ஆகிய மூவரையுமே குறிப்பிட்டிருக்கின்றார். ஔவையார் முதல் இராமலிங்கர் வரை பல புலவர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் சிறப்பியல்புகளை விவரித்திருக்கிறார் எனினும் வேற்று மொழியாளரும் ஏற்றுப் போற்றக்கூடிய தமிழ்க் கவிஞர்களாக முற்கூறிய மூவரையுமே குறிப்பிட்டார். பாரதியாரின் கவிதைகளையும் கட்டுரைகளையும் ஏனைய படைப்புக்களையும் தமிழுலகம் உவந்து அங்கீகரித்துக் கொண்டிருப்பதைப் போலவே அவரின் அபிப்பிராயங்கள் பலவற்றையும் அடிப்படை உண்மைகளாக ஏற்றுக்கொண்டுள்ளது. வள்ளுவரும் இளங்கோவும் கம்பரும் பாரதிக்கு முன்னரே தமிழ் இலக்கிய உலகில் பெருமைக்குரியவர்களாகக் கருதப்பட்டவர்கள். "கல்வியிற் பெரியர் கம்பர்" என்ற முதுமொழி நன்கு பிரசித்தமாதே. வள்ளுவரின் குறளடிகளை எடுத்தாளாத தமிழ்ப்புலவர்கள் இல்லை என்றே கூறிவிடலாம். சிலம்பின் செல்வாக்கு நாட்டார் இலக்கியம் வரை படர்ந்திருப்பதை நாம் அறிவோம். ஆயினும் முப்பெரும் கவிஞர்களைப் பாரதியார் சிறப்பித்துக் கூறியபின் அதுவே நம்மவர்க்கு ஆதாரமான அளவுகோலாயிற்று. பாரதியார் பாராட்டியதாலும் முன்சென்ற மூவர்க்கும் பெருமை பெருகியிருக்கிறது.

இவ்விடத்தில் ஒன்று கவனிக்கத்தக்கது. தனக்கு முன்னிருந்த பெருங்கவிஞரை இனங்கண்டு வரிசையறிந்து பாரதியார் கூறும் பொழுது அறிந்தோ அறியாமலோ தனது இலக்கிய நோக்கினை அடிப்படையாகக் கொண்டே அவர்களை வரிசைப்படுத்தியிருப்பான் என்று கூறுவது தவறாகாது. பொதுவில் நாம் "இலக்கியம்" என்று கூறும்பொழுது நம் உள்ளத்தில், சிந்தனையில் பல எண்ணக்கூறுகள் ஏககாலத்தில் எழுகின்றன. ஒருவரது கல்வி, பயிற்சி, உணர்வு, அனுபவம், உலகநோக்கு இவற்றிற்கேற்ப இலக்கியம் பற்றிய 'வரைவிலக்கணம்' வேறுபடும். எனினும் சாதாரணமாக சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவகம் முதலிய சிறப்புக்களும் உணர்வினைத் தாக்கி வாழ்க்கைக்குப் புதிய விளக்கத்தைத் தரவல்ல கருத்துமே கவிதைக்கு உயிர் நாடியாக இருப்பதைப் பலரும் ஏற்றுக் கொள்வர். இது ஒரு கவிஞனின் பொது இலக்கணம். எல்லாக் கவிஞர்களுக்கும் இச்சிறப்பியல்புகள் ஏதோ ஒரு அளவில் அமைந்திருத்தல் வேண்டும். இவர்களுள் பெருங்கவிஞராகப் பரிணமிப்பவர்கள் மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருக்கும் அதே வேளையில், தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்சனைகளை அறிந்து, அவற்றுக்குப் பரிகாரம் காண முற்படுபவர்களாகவும் இருக்கின்றனர். தத்தம் அனுபவங்களின் துணைகொண்டு கவிபாடத் தொடங்கும் பலர் அவ்வனுபவங்களின் மட்டத்திலேயே தங்கிவிடுகின்றனர். ஆனால் பெருங்கவிஞன் தன் சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக் கொள்ளாது மனுகுலத்தின் நிலைமையினை உணர்ந்து அதனோடு தான் கலந்து எழுதுகின்றான்.

1. இப்பகுதியின் வாயிலாக ஆசிரியர் கூறவிளைந்த முக்கிய விடயப் பொருள் யாது?
2. இலக்கியம் தொடர்பாக ஆசிரியர் முன்வைத்துள்ள கருத்துக்கள் யாவை?
3. மகாகவியின் பண்பு நலன்கள் தொடர்பாக ஆசிரியர் குறிப்பிடுவன யாவை?
4. இப்பகுதியிலே ஆசிரியர் கையாண்டுள்ள மொழிநடை பற்றிக் குறிப்பிடுக.

(4 x 4 = 16 புள்ளிகள்)

பகுதி II

03. இடனறிதல் எனும் அதிகாரத்தினை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. இடனறிதல் அதிகார வைப்பு முறை
ஆ. பகைவர் அரணின் புறந்திருப்பார் இடம் அறிதல்
இ. வினை செய்வதற்கான இடத்தினை அறிதல்
ஈ. பகைமேற் சென்று தாக்கலாகா இடங்களும் தாக்கின் நேரும் தீங்கும்

(20 புள்ளிகள்)

04. கம்பராமாயணம் குகப்படலத்தில், பரதன் கங்கை கரையை அடைந்தது முதல் குகன் கங்கையின் தென்கரையை அடைந்தது வரையான பகுதியை அடிப்படையாகக் கொண்டு,

அ. பரதனது சேனை பற்றிய வர்ணிப்பு

ஆ. பரதன் சேனையைக் கண்ட குகன் அடைந்த கோபம்

இ. குகனது படை பற்றிய சிறப்பு

ஈ. அணிகளின் பயன்பாடு என்பன பற்றி விளக்குக.

(20 புள்ளிகள்)

05. 'இலங்கையாற்றுப்படை' எனும் கட்டுரையை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

அ. ஆசிரியர் கூறவிழைந்த முக்கிய விடயப் பொருள் அதனை நிறுவும் பாங்கு

ஆ. இராமாயணம் குறிப்பிடும் இலங்கையானது எமது நாடல்ல என முன்வைப்போரின் கருத்துக்கள்

இ. இராமாயணம் குறிப்பிடும் இலங்கை எமது நாடுதான் என்பதனை ஆதாரப்படுத்தும் இலக்கியச் சான்றுகள்

ஈ. ஆசிரியர் கையாண்ட உத்திமுறைகள்

(20 புள்ளிகள்)

06. இ. முருகையனின் இருதுயரங்கள் எனும் நாடகத்தினை ஆதாரமாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

அ. பேசுபொருள் வெளிப்படும் விதம்

ஆ. டொக்டர் கந்தப்பு எனும் பாத்திரம்

இ. இந்நாடகத்தினூடாக வெளிப்படும் படிப்பினைகள்

ஈ. ஆசிரியருடய மொழிநடைச் சிறப்பம்சம்

(20 புள்ளிகள்)

07. மாணிக்கவாசகரின் 'கோயிற் திருப்பதிகத்தினை' அடிப்படையாகக் கொண்டு,

அ. தன்னை ஆட்கொள்ளும் சிவபெருமான் பற்றி மாணிக்கவாசகர் கூறியவை

ஆ. சிவபெருமானுடைய சிறப்புக்கள், பெருமைகள்

இ. மாணிக்கவாசகர் இறைவன் மீது கொண்டுள்ள பக்தி

ஈ. மாணிக்க வாசகரின் மொழிநடைச் சிறப்பம்சம்

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு வரைக.

அ. மணிமேகலையில் அந்திமாலைப் பொழுதினை சித்திரிக்க ஆசிரியர் கையாண்ட உத்தி முறைகள்

ஆ. உதயச்சூரியன் எனும் கவிதையில் சூரியன் வருகையால் ஏற்பட்ட மாற்றங்களும் விளைவுகளும்

இ. தேர் சிறுகதையில் வெளிப்படும் யாழ்ப்பாண பண்பாட்டு அம்சங்கள்

ஈ. தமிழ்த் தொண்டு எனும் கட்டுரையில் உத்தமக் கவிகள் பற்றி விபுலானந்தர் குறிப்பிடுவன யாவை?

உ. குயிற்பாட்டு எனும் கவிதையில் இசைமீது பாரதியாருக்கு இருந்த ஈடுபாட்டினை குறிப்பிட்டு விளக்குக.

(20 புள்ளிகள்)

www.lkedu.lk